**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.வீ.காளிதாசன், பி.காம்.,எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்.**

**2026 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 13–ஆம், நாள் வெள்ளிக்கிழமை**

**இடைநிலை மனு எண்.2/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.3/2022**

1. ஈஸ்வரன்
2. சுவாமிநாதன்
3. கே.எஸ்.கவின் கார்த்திகேயன்

....மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள்

/எதிர்/

1. ரத்தினம்மாள்
2. குப்புசாமி ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இறுதியாக 21.01.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.ராஜேஷ், B.Lit.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.ஜெகதீஷ், M.A.,B.L. அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக இந்நீதிமன்றம் இந்த வழக்கை நிராகரித்து உத்தரவிட வேண்டுமென்று மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 11 மற்றும் பிரிவு 151ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>

i) ஆதியில் தாவா சொத்து முத்துக் கவுண்டரும் அவரின் கூட்டு பங்குதாரர்களும் கடந்த 22.10.1940 தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டு மேற்படி பாகப்பிரிவினை ஆவண எண்.1824/1940 என்ற எண்ணாக பதிவு செய்து கொண்டுள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினையில் முத்துக்கவுண்டருக்கு பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினையின் படி முத்துக்கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தினை பாகப்பிரிவினை தேதியிலிருந்து தனது சுவாதீன அனுபவத்தில் வைத்து சுவாதீனம் செய்து வந்துள்ளார். தாவா சொத்தினை பாகப்பிரிவினையின் மூலம் பெற்ற மேற்படி முத்துக்கவுண்டர் தனது குடும்ப உறுப்பினர்களுடன் தாவா சொத்தினை அமைதியான முறையில் சுவாதீன அனுபவம் செய்த வந்த தனது ஒரே மகனும் 1ம் வாதியின் கணவரான சுப்பராய கவுண்டரை தனது வாரிசாக விட்டுவிட்டு தாவா சொத்தைப் பொறுத்து எத்தகைய ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 10.05.1975 ம் தேதியில் காலமாகிவிட்டார் எனவும், அவரின் மனைவி முத்தம்மாள் என்பவர் மேற்படி முத்துக்கவுண்டர் இறப்பதற்கு முன்பாக கடந்த 1970 ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்ற அனைத்து சங்கதிகளும் மனுதாரர்களுக்கு தெரியாது. மேற்படி முத்துக்கவுண்டர் இறப்பதற்கு பின்னிட்டு தாவா சொத்தினை அவரது ஒரே வாரிசான சுப்பராய கவுண்டர் வாதிகளுடன் கூட்டாக சுவாதீனம் செய்து வந்துள்ளார் என்பதும், தாவா சொத்தைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்களில் தனது பெயரில் மாற்றம் செய்து வந்த நிலையில் மேற்படி சுப்பராய கவுண்டரும் தாவா சொத்தைப் பொறுத்து எத்தகைய ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 13.08.2000 ம் தேதியில் வாதிகளை தனது வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்பதும் உண்மையல்ல. எதிர்மனுதாரர்கள் தாவா சொத்து சம்பந்தமாக கடந்த 17.02.2021 ம் தேதியில் வில்லங்கம் போட்டு பார்த்த போது 1ம் எதிர்மனுதாரரின் கணவருக்கு

பாத்தியப்பட்ட தாவா சொத்தை சட்ட விரோதமான முறையில் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் ஆள் மாறாட்டம் செய்து மேற்படி 10.11.1975 ம் தேதிய கிரைய ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும், மேற்படி கிரைய ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை எனவும், அதனடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு எத்தகைய உரிமையும் ஏற்படவில்லை எனவும், மேற்படி ஆவணம் மறுபலனுக்காக ஏற்படுத்தப்படவில்லை எனவும், மேற்படி ஆவணம் நடைமுறைப்படுத்தக்கூடியது அல்ல மற்றும் செல்லத்தக்கதல்ல நாளது தேதியிலும் தாவா சொத்தின் சுவாதீனம் வாதிகள் வசமே உள்ளது என்பதும், மேற்படி 10.11.1975 தேதிய கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யப்படவேண்டும் என்பதும், மேற்படி ஆவணம் தாவா சொத்தில் வாதிகளுக்கு உள்ள உரிமையினை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக் கூடியது அல்ல என்பதும் உண்மையல்ல.

ii) மேற்படி மோசடியாக ஆள் மாறாட்டம் செய்து வாதிகளுக்கு சொந்தமான தாவா சொத்தினை கிரையம் பெற்றதினை மறைக்க வேண்டும் என்பதற்கு மோசடியாக கிரையம் பெற்ற சொத்தினையும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு பாகப்பிரிவினை வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்ளையும் சேர்த்து கடந்த 13.01.2010 தேதியில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து கொண்டு தங்களது குடும்ப உறுப்பினர்களான 3 முதல் 5 பிரதிவாதிகளும் ஒருவருக்கொருவர் கூட்டு சதி சேர்ந்து கொண்டு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து முழுவதினையும் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மோசடியாகவும் தனித் தனியாக தான செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ள விவரமும் மேற்படி வில்லங்க சான்று மூலம் வாதிகளுக்கு தெரிய வந்ததாகவும், எனவே, 13.01.2010 ம் தேதியில் மூன்று தான செட்டில்மெண்ட்களும் வாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையினை

ஏமாற்றம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் மேற்படி மூன்று செட்டில்மெண்ட் ஆவணங்கள் தாவா சொத்தில் வாதிகளுக்கு உள்ள உரிமைகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதும் அல்ல என்றும், எனவே மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்களில் உள்ள தாவா சொத்தைப் பொறுத்து மட்டும் செல்லத்தக்கதல்ல எனவும், இந்த ஆவணங்களும் தாவா சொத்தில் வாதிகளின் உரிமையினை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல எனவும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை எனவும், எனவே மேற்படி ஆவணங்களில் தாவா சொத்தில் வாதிகளுக்கு உள்ள உரிமைகளை எவ்வகையிலும் தடுக்கக் கூடியது அல்ல எனவும், எனவே மேற்படி 13.01.2010.ம் தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் மூன்று தாவா சொத்தில் வாதிகளுக்கு மட்டும் உரிமையினை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக் கூடியது அல்ல என விளம்புகை செய்யப்பட வேண்டும் எனவும் சொல்வது உண்மையல்ல.

iii) தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி பழனிசாமி கவுண்டர் சுப்பராய கவுண்டர் உரிய மறுபயன் கொடுத்து கடந்த 10.11.1975 ஆம் தேதியன்று கிரையம் பெற்று அந்த கிரைய ஆவணமானது பல்லடம் சார்பதிவக அலுவலகத்தில் ஆவண எண்.2675/1975 என்ற ஆவண எண்ணாக பதிவாகி முழுமையான சுவாதீனத்தில் இருந்து கொண்டு ஆண்டனுபவித்து வந்துள்ளார். மேலும் மேற்படி சுப்பராய கவுண்டர் தாவா சொத்தினை கிரையம் செய்து கொடுக்கும் பொழுது 2 ஆம் வாதி குப்புசாமி பிறக்கவே இல்லை. மேற்படி 1–ஆம் வாதிக்கு அவரது கணவர் சுப்பராய கவுண்டர் 1–ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விபரம் மேற்படி தேதியன்றே தெரியும். மனுதாரர்களின் தந்தை பழனிசாமி கவுண்டர் கடந்த 13.01.2010 ம் தேதியன்று தாவா சொத்துக்கள் மற்றும் அவருக்கு

பாத்தியப்பட்ட பிற சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தனிதனியாக தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டு அது பல்லடம் சார்பதிவக அலுவலகத்தில் ஆவண எண்கள். 330, 331, 332/2010 ஆகிய எண்களாக பாத்தியப்பட்டு மனுதாரர்கள் தனித்தனியாக சுவாதீனத்தில் இருந்து கொண்டு ஆண்டனுபவித்து வந்துள்ளார்கள். மேலும் வருவாய் ஆவணங்களிலும் பெயர் சேர்க்கப்பட்டு யாருடைய இடையூறுமின்றி முழுமையான சுவாதீனத்தில் இருந்து கொண்டு நாளது தேதி வரை ஆண்டனுபவித்து வருகின்றார்கள். 1–ஆம் வாதிக்கு தாவா சொத்துக்களை அவரது கணவர் சுப்பராய கவுண்டர் 1–ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த விபரம் கடந்த 1975–ஆம் வருடமே தெரியும். தாவா சொத்துக்களை 1–ஆம் பிரதிவாதி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு கடந்த 2010 வருடமே தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்து அவர்கள் ஆண்டனுபவித்து வருவது 1,2 வாதிகளுக்கு நன்கு தெரியும். மேலும் மேற்படி 1,2 வாதிகளுக்கு தாவா சொத்தினை விற்பனை செய்த விபரம் தெரிந்த மூன்று ஆண்டுகளுக்குள் தாவாவினை தாக்கல் செய்யாமல் சுமார் 47 ஆண்டுகளுக்கு பிறகு இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள் எனவே காலவரையறை சட்டத்தின்படி அசல் வழக்குரையை நிராகரித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கமாகும்.

**2. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டும். 1ம் எதிர்மனுதாரர் கடந்த 10.11.1975 தேதியில் பிறக்கவில்லை என்பது உண்மையே. ஆனால், 1ம் வாதிக்கு கடந்த 10.11.1975 தேதியிலேயே கிரைய ஆவணத்தை

பற்றி தெரியும் என்பது உண்மையல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மனுதாரர்கள் பெயருக்கு ஆவண எண்கள் 330/2010, 331/2010, 332/210 என்ற செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதிக்கொடுத்துள்ளது எதிர்மனுதாரர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. மனுதாரர்கள் எந்த காலத்திலும் தாவா சொத்தின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்ததில்லை. வருவாய் ஆவணங்கள் தாவா சொத்தின் மீது மனுதாரர்களுக்கு எந்தவிதமான உரிமையையோ அல்லது உரிமை மூலத்தையோ ஏற்படுத்தாது. 1ம் எதிர்மனுதாரருக்கு அவரது கணவர் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதி வைத்துள்ள கிரைய ஆவணங்கள் பற்றி 1975ம் ஆண்டிலேயே தெரியும் என்பது உண்மையல்ல. எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரர்கள் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதப்பட்ட தேதியிலேயே தெரியுமென்றும், எனவே 3 ஆண்டுகளுக்குள் இந்த வழக்கானது தாக்கல் செய்யாததால் காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையல்ல.

ii) மனுதாரர்கள் உரிமையியல் நடைமுறை விசாரணை சட்டம் கட்டளை 7 விதி 11ன் படி எந்த உட்பிரிவின் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லாததால் இந்த மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11 (டி)ன் படி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பொறுத்து மட்டும் காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலனை செய்ய முடியுமென்றும், நிராகரிக்க முடியுமென்றும், வழக்குரையானது வழக்கு மூலத்தையோ அல்லது காலவரையறையால் பாதிக்கப்பட்டிருந்தாலோ நிராகரிக்கலாம் என்பது பல வழக்குகளில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வழக்குரை சங்கதிகளிலிருந்து வழக்கானது காலவரையறையால் பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே வழக்குரையை நிராகரிக்க முடியும். காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது

பொருண்மை மற்றும் சட்டம் கலந்த வினா ஆகும். எனவே, இருதரப்பிலும் சாட்சியங்கள் முன்னிலைபடுத்திய பின்பு தான் அது குறித்து முடிவு செய்ய முடியும். உரிமையியல் விசாரணை சட்டம் கட்டளை 7 விதி 11 (டி)ன் படி ஒரு மனுவினை முடிவு செய்வதற்கு வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும். பிரதிவாதிகள் எடுக்கக்கூடிய எதிர்வாதங்களை கவனத்தில் கொள்ள தேவையில்லை. பிரதிவாதிகள் அவர்களது எதிர்வாதத்தை தங்களது எதிர்வழக்குரையில் மட்டுமே சொல்லி வழக்கு விசாரணையை எதிர்கொள்ள வேண்டும். எனவே, இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்பதே 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.

<u>3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை ஏற்றுக்கொள்வதாக 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.</u>

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :–</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>6. தீர்வு:–</u>

இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கின் ஆவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், அசல் வழக்கு எண்.3/2022 வழக்கானது

விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 11 மற்றும் பிரிவு 151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) கற்றறிந்த மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், தாவா சொத்தானது ஆதியில் 22.10.1940 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி முத்துக்கவுண்டர் என்பவருக்கு பி அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டதாகும். மேற்படி முத்துக்கவுண்டர் சுப்பராயகவுண்டர் என்பவரை வாரிசாக விட்டுவிட்டு காலமான பின்னர் அசல் வழக்கின் 2ம் பிரதிவாதியின் கணவரும், மனுவின் 1, 2 மற்றும் 3 மனுதாரர்களின் தந்தையுமான 1ம் பிரதிவாதியாகிய பழனிச்சாமி கவுண்டருக்கு உரிய மறுபயன் பெற்றுக்கொண்டு கடந்த 10.11.1975 தேதியில் தாவா சொத்தினை பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவணமாக பதிவு செய்து சுவாதீனத்தையும் ஒப்படைத்துள்ளார். மேற்படி சுப்பராய கவுண்டர், பழனிச்சாமி கவுண்டருக்கு கிரையம் கொடுத்த விவரமானது 1ம் எதிர்மனுதாரராகிய ரத்தினம்மாள் என்பவருக்கு நன்கு தெரியும். 1ம் பிரதிவாதியான பழனிச்சாமிகவுண்டர் கடந்த 13.01.2010 தேதியில் தாவா சொத்துக்கள் மற்றும் அவருக்கு பாத்தியப்பட்ட பிற சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து 3 முதல் 5 பிரதிவாதிகளாகிய இம்மனுவின் மனுதாரர்களுக்கு தனித்தனியாக தான செட்டில்மெண்ட் ஆவணங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி தான செட்டில்மெண்ட் எழுதிவைக்கப்பட்ட தேதியிலிருந்து மனுதாரர்கள் தாவா சொத்து மற்றும் பிற சொத்துக்களை தங்களது சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள். 1ம் எதிர்மனுதாரருக்கு அவரது கணவர் சுப்பராயகவுண்டர் 1ம்

பிரதிவாதி பெயருக்கு கிரையம் செய்து கொடுத்த விவரம் அப்போதே தெரியும். 2ம் பிரதிவாதி அந்த சமயத்தில் பிறக்கவே இல்லை. 1, 2 பிரதிவாதிகள் மனுதாரர்கள் பெயருக்கு கடந்த 13.01.2010 தேதியில் தான செட்டில்மெண்ட் எழுதிவைத்த விவரமும் எதிர்மனுதாரர்களுக்கு அப்போதே நன்கு தெரியும். விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கினை 3 ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். ஆனால், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கினை சுப்பராயகவுண்டர் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்னர் 47 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகும். எனவே, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையானது நிலைக்கத்தக்கதல்ல. காலவரையறையால் பாதிக்கப்பட்ட காரணத்தால் நிராகரிக்கப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

8) கற்றறிந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், தாவா சொத்தானது கடந்த 22.10.1940 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி 1ம் எதிர்மனுதாரரின் கணவரான சுப்பராயகவுண்டர் என்பவரின் தந்தை முத்துக்கவுண்டர் என்பவருக்கு பி அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்பது உண்மையே. மேற்படி முத்துக்கவுண்டர் 1ம் எதிர்மனுதாரரின் கணவரான சுப்பராயகவுண்டர் என்பவரை ஒரே வாரிசாக விட்டுவிட்டு கடந்த 10.05.1975 தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி முத்துக்கவுண்டரின் மனைவி முத்தம்மாள் அவருக்கு முன்பாகவே கடந்த 1970ம் ஆண்டில் காலமாகிவிட்டார். முத்துக்கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது ஒரே வாரிசான சுப்பராயகவுண்டர் தாவா சொத்துக்களை அடைந்து தனது சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் அனுபவித்து வந்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதியின் கணவராகிய சுப்பராயகவுண்டர் தாவா சொத்தை

பொறுத்து எத்தகைய ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 13.08.2000 தேதியில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளை தனது வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். கடந்த 10.11.1975 தேதியில் 1ம் பிரதிவாதி பழனிச்சாமி கவுண்டர், சுப்பராயகவுண்டர் போன்று வேறுஒரு நபரை வைத்து ஆள்மாறாட்டம் செய்து 1ம் பிரதிவாதி கிரையம் செய்தது போல் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி விவரமான கடந்த 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் எதிர்மனுதாரர்கள் வருவாய் ஆவணங்களில் அவர்களின் பெயர்களை சேர்ப்பதற்கு வில்லங்க சான்று போட்டுப்பார்த்த பொழுது தான் அவர்களுக்கு தெரியவந்துள்ளது. 1ம் எதிர்மனுதாரர் பெயருக்கு கடந்த 10.11.1975 தேதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கிரைய ஆவணமானது ஆள்மாறாட்டம் செய்து ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணம் நடைமுறைக்கே வராத ஆவணமாகும். பின்னிட்டு கடந்த 13.01.2010 தேதியில் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து மனுதாரர்கள் பெயருக்கு தனித்தனியாக 3 தான செட்டில்மெண்ட் பத்திரங்களை தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்தியுள்ளார்கள். மேற்படி 10.11.1975 தேதியிட்ட கிரைய பத்திரம் மற்றும் 13.01.2010 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் செல்லாது என்று விளம்புகை செய்யவே எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். ஆவணத்தை ரத்து செய்ய வேண்டி மேற்படி ஆவணம் பற்றி தெரியவந்த நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்ய வேண்டும். எதிர்மனுதாரர்களுக்கு பிரதிவாதிகள் பெயரிலுள்ள ஆவணங்கள் பற்றி கடந்த 15.02.2021 தேதியில் தான் தெரியவந்துள்ளது. எதிர்மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கினை 04.01.2022 தேதியிலேயே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர்களுக்கு மேற்படி ஆவணங்களை பற்றி தெரியவந்த நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும், 1975ம் ஆண்டில் 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தப்பட்டதாக சொல்லும்

கிரைய ஆவணம் மோசடியாக ஆள்மாறாட்டம் செய்து ஏற்படுத்தப்பட்டது என்று எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளதாலும், காலவரையறையால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பது சட்டம் மற்றும் பொருண்மை சார்ந்த வினா என்பதால் இருதரப்பு சாட்சியங்கள் முன்னிலைப்படுத்திய பின்பு தான் அது பற்றி முடிவு செய்ய இயலும். மேலும், வழக்குரையை நிராகரிக்க கோரும் மனுவில் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை மட்டும் தான் கருத்தில் கொள்ள வேண்டும். பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் எதிர்வாதமாக எடுக்கக்கூடிய சங்கதிகளை கருத்தில் கொள்ள தேவையில்லை என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பல வழக்குகளில் தீர்மானித்துள்ளன. எனவே, இந்த மனுவானது நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

9) இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்குரை சங்கதிகள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், தாவா சொத்தானது ஆதியில் முத்துக்கவுண்டர் என்பவருக்கு 22.10.1940 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பி அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்பதும், மேற்படி முத்துக்கவுண்டர் எத்தகைய ஏற்பாடும் செய்து வைக்காமல் கடந்த 1975ம் ஆண்டு 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் கணவரும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதியின் தந்தையுமான சுப்பராய கவுண்டர் என்பவரை ஒரே வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது.

10) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்குரையை கவனமாக பரிசீலனை செய்ததில், முத்துக்கவுண்டர் இறப்பிற்கு பின்னிட்டு சுப்பராயகவுண்டர் சொத்துக்களை அடைந்து தனித்த சுவாதீனங்களில் அனுபவித்து வந்துள்ளார் என்றும், பின்னிட்டு

சுப்பராயகவுண்டர் கடந்த 13.08.2000 தேதியில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளை வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருவாய் துறை ஆவணங்களில் பெயர்மாற்றம் செய்வதற்கு கடந்த 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தாவா சொத்தை பொறுத்து வில்லங்க சான்று போட்டுப்பார்த்த போது தான் கடந்த 10.11.1975 தேதியில் 1ம் பிரதிவாதி பழனிச்சாமி பெயருக்கு சுப்பராயகவுண்டர் கிரையம் செய்து கொடுத்தது போல் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ள விவரமும், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் பெயருக்கு தனித்தனியாக 3 செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்துள்ள விவரமும் வாதிகளுக்கு தெரியவந்ததாகவும், சுப்பராயகவுண்டர் 1ம் பிரதிவாதி பெயருக்கு எந்தவித ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றும், சுப்பராயகவுண்டர் போன்று ஆள்மாறாட்டம் செய்து 1ம் பிரதிவாதி கடந்த 10.11.1975 தேதியிட்ட கிரைய பத்திரத்தினை மோசடியாக ஏற்படுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரைய ஆவணமும், 3 முதல் 5 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணமும் செல்லாத மற்றும் நடைமுறைப்படுத்தாத ஆவணங்கள் என்றும் அது எதிர்மனுதாரர்/வாதிகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், எனவே மேற்படி ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டியது அவசியமென்றும் அசல் வழக்குரையில் வாதிகள் தெரிவித்துள்ளார்கள்.

11) வழக்குரை சங்கதிகளிலிருந்தும், வழக்குரை ஆவணங்களிலிருந்தும் 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கிரைய ஆவணம் 10.11.1975 தேதியிலிருந்து 46 ஆண்டுகள் கழித்து தான் மேற்படி அசல் வழக்கானது மேற்படி கிரைய மற்றும் செட்டில்மெண்ட் ஆவணங்களை செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது தெளிவாக தெரிகின்றது. பொதுவாக ஒரு ஆவணம் செல்லாது என்று விளம்புகை செய்ய பரிகாரம் கோரும்

வழக்கானது மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்தோ அல்லது அந்த ஆவணம் பற்றிய அறிவு ஏற்பட்ட நாளிலிருந்தோ 3 ஆண்டுகளுக்குள் மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்ய வேண்டுமென்பது காலவரையறை சட்டத்தால் சொல்லப்பட்டுள்ள நடைமுறையாகும்.

12) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி அசல் வழக்கினை ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 46 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்தாலும் மேற்படி ஆவணம் பற்றி கடந்த 2021ம் ஆண்டு பிப்ரவரி முதல் வாரத்தில் வில்லங்க சான்று போட்டுப்பார்த்த பின்பு தான் தெரியவந்ததாக தெரிவித்துள்ளார்கள். மேற்படி அவர்களுக்கு தெரியவந்ததாக சொல்லும் தேதியிலிருந்து ஓராண்டு காலகட்டத்திற்குள் இந்த அசல் வழக்கினை கடந்த 04.01.2022 தேதியில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பது வழக்கின் ஆவணங்கள் மூலம் தெரியவருகின்றது.

13) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வாதிட்டது போல் ஒரு வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது சட்டம் மற்றும் பொருண்மை கலந்த வினா என்பதும், மேற்படி காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்பு தான் முடிவு செய்ய இயலும் என்பதும் தீர்மானிக்கப்பட்ட சட்டமாக உள்ளது. மேலும், ஒரு வழக்கானது நிராகரிக்கபட வேண்டியதா என்பது குறித்து முடிவு செய்வதற்கு வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மட்டும் தான் கவனத்தில் கொள்ளவேண்டுமென்பதும், பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் எடுக்கவேண்டிய எதிர்வாதங்களை வழக்குரையை நிராகரிப்பதற்கு கவனத்தில் எடுத்துக்கொள்ள கூடாது என்பதும், தீர்மானிக்கப்பட்ட சட்டமாக உள்ளது.

14) மனுதாரர்கள் இந்த வழக்கில் அசல் வழக்கினை நிராகரிக்க வேண்டுமென்று கோருவதற்கு சொல்லியுள்ள சங்கதியானது அவர்கள் தங்களது எதிர்வழக்குரையில் எதிர்வாதமாக எடுக்க வேண்டிய சங்கதியாகும். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தங்களது அசல் வழக்குரையில் சுப்பராயகவுண்டர் போன்று ஆள்மாறாட்டம் செய்து 1ம் பிரதிவாதி பழனிச்சாமி கவுண்டர் தனது பெயருக்கு கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றும், சுப்பராயகவுண்டர் எந்தவொரு ஆவணத்தையும் பழனிச்சாமிகவுண்டர் பெயருக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சுப்பராகவுண்டர் 1ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 10.11.1975 தேதியிட்ட கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்தாரா அல்லது 1ம் பிரதிவாதி ஆள்மாறாட்டம் செய்து மோசடியாக ஆவணத்தை தனது பெயருக்கு கிரைய ஆவணமாக பதிவு செய்துள்ளாரா என்பது குறித்து இருதரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தியும், சாட்சிகளை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் தான் முடிவுக்கு வர இயலும். மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பல வழக்குகளில் தீர்மானித்துள்ளது போல், காலவரையறை சட்டத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா என்பது சட்டம் மற்றும் பொருண்மை கலந்த வினா என்பதால் மேற்படி சங்கதி குறித்தும் இருதரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்திய பின்னர் தான் முடிவு செய்ய இயலும். எனவே, மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் இந்த மனு அனுமதிக்க உகந்ததல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

V KALIDASAN Digitally signed by V KALIDASAN Date: 2026.02.13 18:24:04 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

**<u>பிற்சேர்க்கை:–</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

V KALIDASAN Digitally signed by V KALIDASAN Date: 2026.02.13 18:24:11 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

<u>Draft/**Fair** Order</u>

I.A.No.2/2023
in OS.No.3/2022
Dated: 13.02.2026
DMC, Palladam.